AEC Australian Electoral Commission

Tamil/தமிழ்

# கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள்

ஒரு கூட்டாட்சி கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்பது அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட மாற்றம் குறித்த கேள்விக்கான தேசிய வாக்கெடுப்பாகும். நமது நாடு எவ்வாறு ஆளப்படுகிறது என்பதற்கான அடிப்படை ஆவணம் அரசியலமைப்புச் சட்டமாகும். 1901 முதல் இதுவரை 44 கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள் நடாத்தப்பட்டுள்ளன. நாம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடாத்தி நீண்ட காலம் ஆகிவிட்டது - கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் 1999 ஆம் ஆண்டில் இறுதியாக ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெற்றது.

## யார் வாக்களிக்க வேண்டும்

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல அவுஸ்திரேலியப் பிரஜைகளும் கட்டாயம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றில் வாக்களிக்க வேண்டும். நீங்கள் பதிவு இடாப்பில் பதிவு செய்திருக்க வேண்டும். அத்துடன் பின்வருவன உங்களுக்கு நிகழ்ந்திருந்தால் உங்கள் பதிவு விபரங்களைப் புதுப்பிக்க வேண்டும்:

- அண்மையில் உங்கள் பெயரை அல்லது முகவரியை மாற்றியிருத்தல்
- 18 வயதாகியிருத்தல், அல்லது
- அவுஸ்திரேலியப் பிரஜையாக மாறியிருத்தல்.

**aec.gov.au** இற்குச் செல்லவும் அல்லது பதிவுக்கான படிவமொன்றை எந்தவொரு AEC அலுவலகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளவும்.

## எப்போது, எங்கே வாக்களிக்க வேண்டும்

வாக்குப்பதிவு சனிக்கிழமை நாளொன்றில் நாடெங்கிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறும்.

நடமாடும் வாக்குப்பதிவுக் குழுக்களும் வாக்களிக்கும் தினத்துக்கு முந்தைய வாரங்களில் பல தொலைதூர பகுதிகளுக்கு விஜயம் செய்வார்கள்.

அன்றைய தினம் உங்களால் வாக்களிக்க முடியாவிட்டால், நீங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமோ முன்கூட்டியே வாக்களிக்கும் தகுதியைப் பெறலாம்.

மேலதிக விபரங்களை **aec.gov.au** இல் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு அண்மிக்கும் போது பெற்றுக் கொள்ளலாம்.


## எவ்வாறு வாக்களிப்பது

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றில் வாக்களிப்பது தேர்தலிலிருந்து வேறுபட்டது. நீங்கள் ஒரு வாக்குச் சீட்டை மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும்.

அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட மாற்றம் குறித்த ஒரு கேள்வி வாக்குச் சீட்டில் காணப்படும். வாக்களிக்கும் போது, முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரித்தால் 'yes' எனவும் அல்லது அங்கீகரிக்காவிடின் 'no' எனவும் எழுதுக.

வாக்களிப்பு நிலையத்தில், முறையாக வாக்களிப்பது குறித்து வாக்களிப்பு நிலைய அதிகாரி, நண்பர் அல்லது குடும்ப உறுப்பினரிடம் உதவி கேட்கலாம்.


**நீங்கள் தவறு செய்தால் கவலைப்பட வேண்டாம்.** இன்னொரு வாக்குச் சீட்டைக் கேட்டு மீண்டும் தொடங்கவும்.




மாதிரி வாக்குச் சீட்டு

முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரித்தால் **YES** என்று எழுதவும்.

**அல்லது**




மாதிரி வாக்குச் சீட்டு

முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரிக்கவில்லை என்றால் **NO** என்று எழுதவும்.


உங்கள் பதில் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும்.

# முடிவு எவ்வாறு தீர்மானிக்கப்படும்


அரசியலமைப்புச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட மாற்றம் கட்டாயம் ‘இரட்டைப் பெரும்பான்மை’யால் (double majority) அங்கீகரிக்கப்பட வேண்டும். அதாவது:

- சகல மாநிலங்கள் மற்றும் டெரிட்டரி பிராந்தியங்களிலிருந்தும் (50% இற்கும் மேற்பட்ட) முறையான தேசியப் பெரும்பான்மை வாக்குகள் பதிவாதல், மற்றும்
- பெரும்பான்மையான மாநிலங்களில் (ஆறு மாநிலங்களில் குறைந்தது நான்கில்) (50% இற்கும் மேற்பட்ட) முறையான பெரும்பான்மை வாக்குகள் பதிவாதல்.

**ருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நிறைவேற்றப்படுவது எப்போதெனில்**




**கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நிறைவேற்றப்படாது எப்போதெனில்**




**இதன் முடிவு அறுதியானது.** அதாவது, வாக்காளர்கள் தீர்மானிப்பதன் படி அவுஸ்திரேலிய அரசாங்கம் கட்டாயம் செயற்பட வேண்டும்.

## கட்டுக்கதைகளை உடைக்கும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள்

**கட்டுக்கதை:** கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள் எந்தத் தலைப்பிலும் எந்த சட்டத்திலும் நடைபெற முடியும்
**உண்மை:** அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்த மாத்திரமே அவை நடைபெறுகின்றன.

**கட்டுக்கதை:** 2017 திருமணச் சட்டக் கணக்கெடுப்பு ஒரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பாகும் அல்லது மக்கள் தீர்ப்பாகும்.
**உண்மை:** அது ஒரு தபால் மூல கணக்கெடுப்பாகும், மேலும் அதற்கான பங்கேற்பு கட்டாயமற்றதாக இருந்தது.

**கட்டுக்கதை:** கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றில் வாக்களிப்பது கட்டாயமல்ல.
**உண்மை:** நீங்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அவுஸ்திரேலியப் பிரஜையாக இருப்பின் கட்டாயம் வாக்களிக்க வேண்டும்.

**கட்டுக்கதை:** நான் தனியாகப் பதிவு இடாப்பில் பதிவு செய்வது அவசியம்.
**உண்மை:** நீங்கள் தேர்தல்களுக்காகப் பதிவு செய்யப்பட்டவராக இருப்பின், கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகளுக்கும் நீங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள். உங்கள் விபரங்கள் புதுப்பித்த நிலையில் இருப்பதை மாத்திரம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கட்டுக்கதை:** நான் தபால் மூலம் மாத்திரமே வாக்களிக்க முடியும்.
**உண்மை:** நீங்கள் அத்தினத்தில் வாக்களிக்கலாம். அல்லது குறித்த காலம் அண்மிக்கும் போது aec.gov.au ஐப் பார்வையிட்டு, முன்கூட்டியே நேரடியாக அல்லது தபால் மூலம் வாக்களிப்பதற்கான உங்களது தகுதியைப் பார்த்துக் கொள்க.

**கட்டுக்கதை:** ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நிறைவேற 50% அல்லது அதற்கு மேற்பட்ட ‘yes’ வாக்குகள் தேவை.
**உண்மை:** சகல மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களிலிருந்தும் 50% இற்கும் அதிகமான வாக்காளர்களாலும், பெரும்பான்மையான மாநிலங்களில் (ஆறு மாநிலங்களில் குறைந்தது நான்கில்) 50% இற்கும் அதிகமான வாக்காளர்களாலும் அது அங்கீகரிக்கப்பட வேண்டும். இதுவே ‘double majority’ ஆகும்..

## AEC இன் வகிபாகம்

AEC என்பது ஒரு சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற சட்டரீதியான அதிகார சபையாகும்.

இடாப்பில் பதிவு செய்தல், வாக்களித்தல் மற்றும் தகவல் சேவைகளை வழங்குதல் என்பன கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் அதன் வகிபாகமாகும்.

அவுஸ்திரேலிய குடும்பங்களுக்கு yes/no துண்டுப் பிரசுரத்தை AEC வழங்குகின்ற போதிலும் இந்த ஆக்கத்தில் உள்ள தகவல்கள் பாராளுமன்றத்தால் தயாரிக்கப்படுகின்றன. துண்டுப்பிரசுரத்தை வழங்குவதற்கு அப்பால், அரசியலமைப்பில் முன்மொழியப்படும் மாற்றத்திற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ AEC பிரச்சாரங்கள் எதிலும் ஈடுபடுவதில்லை.

## நில் மற்றும் ஆதாரத்தைக் கவனி

அவுஸ்திரேலியாவிற்காக ஒரு முக்கியமான தீர்மானத்தை எடுக்க, கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் உங்கள் வாக்களிப்பு உதவும்.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக் காலப்பகுதியில், வேண்டுமென்றே தவறாக வழிநடாத்தும் தகவல்களை நீங்கள் காண நேரலாம்.

நீங்கள் பார்ப்பதை, கேட்பதை அல்லது வாசிப்பதை நிதானமாகப் பார்த்து; அவற்றின் ஆதாரத்தை பரிசீலித்து, சரிபார்த்துக் கொள்ளவும். இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் தவறான தகவல்களால் தவறாக வழிநடாத்தப்பட வேண்டாம்.

ஆதாரத்தை சரிபார்ப்பதற்கான உதவிக்குறிப்புகளுக்காக **aec.gov.au** இற்குச் செல்லவும்.

இந்த எதிர்வரும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின்
**மூலாதாரத்தைப் பரிசீலிக்கவும்**

**aec.gov.au/translated** 1300 720 153

AEC Australian Electoral Commission

AEC23/1804

கேன்பெராவின் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது
Authorised by the Electoral Commissioner, Canberra